Reg. No. : ....................................

Name : .........................................

**SY-12**

**SECOND YEAR HIGHER SECONDARY EXAMINATION, MARCH 2022**

Part – II

**TAMIL**

Maximum : 80 Scores

Time : 2½ Hours

Cool-off time : 15 Minutes

***General Instructions to Candidates :***

- There is a 'Cool-off time' of 15 minutes in addition to the writing time.
- Use the 'Cool-off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- Read the instructions carefully.

**பகுதி - I**

**1 முதல் 6 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் நான்களுக்கு சரியான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள். மதிப்பெண் 1 வீதம்**

**(4 × 1 மதிப்பெண்கள் = 4)**

1. கேரளத்தின் கோவில் கலையான கூடியாட்டத்தோடு நெருங்கிய தொடர்புடைய கலைவடிவம்.

(அ) தெய்யம் (ஆ) நங்கையார் கூத்து

(இ) கதகளி (ஈ) படையணி

2. 'இறையிலி நிலம்' என்பதன் பொருள்.

(அ) வரியுடைய நிலம் (ஆ) நீர்நிலம்

(இ) வரியில்லாத நிலம் (ஈ) இவற்றுள் எதுவும் இல்லை

3. 'உடற்பயிற்சி' என்ற கவிதையின் ஆசிரியர் யார்?

(அ) குமரி ஆதவன் (ஆ) கவிஞர் ஜெ.தனுசு

(இ) கவிஞர் கடவூர் மணிமாறன் (ஈ) இவர்களுள் எவருமில்லை

4. ஐம்பெரும்பூதங்களில் இடம்பெறாத ஒன்று

(அ) மெய் (ஆ) நிலன்

(இ) விசும்பு (ஈ) வளி

5. "'விழா' என்னும் திறந்த வாசல் வழியாகத் தான் நம் நாட்டு மக்களை அறிந்து கொள்ள முடியும்" – என்று கூறியவர்.

(அ) கான்சாகிபு (ஆ) தாகூர்

(இ) அரிஸ்பாட்டில் (ஈ) இராமநாதன்

6. 'பசியின் கொடுமையைப் பசிப்பிணி என்னும் பாவி' என்று குறிப்பிடும் காப்பியம்

(அ) – கம்பராமாயணம் (ஆ) – மணிமேகலை

(இ) – சீவக சிந்தாமணி (ஈ) – வளையாபதி

**7 முதல் 10 வரையுள்ள வினாக்களுள் அனைத்த வினாக்களுக்கும் சரியான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள். மதிப்பெண் 1 வீதம்**

**(4 × 1 மதிப்பெண்கள் = 4)**

7. தொண்ணூற்றொன்பது மலர்களின் பெயர்களையும் நிரலாக அமைத்துச் சொல்லும் நூல்

(அ) பத்துப்பாட்டு (ஆ) வஞ்சிப்பாட்டு

(இ) குறிஞ்சிப்பாட்டு (ஈ) பாப்பா பாட்டு

8. 'File' என்ற ஆங்கிலக் கணினிக் கலைச் சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல் எது ?

(அ) மின் இணைப்பு (ஆ) அறிவிப்பு

(இ) மேசைப் பதிப்பு (ஈ) கோப்பு

9. சேரநாட்டை, 'மலைமண்டிலம்' என்று குறிப்பிடும் கல்வெட்டு ?

(அ) சுசீந்திரம் கல்வெட்டு (ஆ) மாங்குளம் கல்வெட்டு

(இ) அசோகர் கல்வெட்டு (ஈ) இவற்றுள் எதுவுமில்லை

10. ஐவகை நிலங்களில் ஒன்றாகக் கருதப்படுவது .

(அ) வஞ்சி (ஆ) காஞ்சி

(இ) நொச்சி (ஈ) குறிஞ்சி

## பகுதி - II

**11 முதல் 15 வரையுள்ள எவையேனும் மூன்றனுக்கு விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 2 வீதம் (3 × 2 மதிப்பெண்கள் = 6)**

11. யோகாசனத்தால் ஏற்படும் நன்மைகளில் இரண்டினைக் குறிப்பிடுங்கள்.

12. 'மக்கத்தாயம்', 'மருமக்கத்தாயம்' சிறு விளக்கம் எழுதுங்கள்.

13. 'வாகை' என்ற சொல் உணர்த்தும் இரு பொருள்கள் எழுதுங்கள்.

14. வானிலையைத் தெரிவிக்கும் விலங்குகள் இரண்டின் பெயரினை எழுதுங்கள்.

15. பாக்குவெட்டிப் பாட்டையாவின் பண்பு நலன்கள் இரண்டினை எழுதுங்கள்.

**16 முதல் 18 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 2 வீதம். (2 × 2 மதிப்பெண்கள் = 4)**

16. 'நடுகல்' சிறுகுறிப்பு எழுதுங்கள்.

17. நாட்டுப்புற கிராமிய விளையாட்டுகள் இரண்டினை எழுதுங்கள்.

18. ஏற்றத்தாழ்வு இல்லாத சமுதாயம் உருவாக்கக் கவிஞர் சுரதா குறிப்பிடும் இரு மாற்றங்களை எழுதுங்கள்.

## பகுதி - III

**19 முதல் 23 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு அரைப்பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 4 வீதம்**

**(3 × 4 மதிப்பெண்கள் = 12)**

19. *'கேரளச் சமூக மறுமலர்ச்சியில் திரு நாராயண குருவின் பங்களிப்பு' என்ற தலைப்பில் வானொலி உரை தயாரியுங்கள்.*

20. *பள்ளி இலக்கிய மலரில் வெளியிடுவதற்காக 'மதுரை நகரின் சிறப்புகள்' என்ற தலைப்பில் பெட்டிச் செய்தி தயாரியுங்கள்.*

21. *'இன்றைய உணவுகளும் நோய்களும்" என்ற தலைப்பில் விவாதக்குறிப்பு தயார் செய்யுங்கள்.*

22. *கீழே தரப்பட்டுள்ள பாடல்வரிகளை நயம்பாராட்டி எழுதுங்கள்.*

*" சங்குபோல் நெல்விளையும்!*
*சமுத்திரம் போல் போர் ஏறும்!*
*முத்துப் போல் நெல்விளையும்*
*மூவுலகும் போர் ஏறும்!*
*காலாலே மடை தள்ளி*
*கழனி எல்லாம் நீர் பாய்ச்சி*
*சோற்றால் மடையடைப்போம்!"*

*– பயிர்த்தொழில் பாடல்கள்*

23. *கீழே கொடுகப்பட்டுள்ள பகுதியைத் தூய தமிழில் எழுதுங்கள்.*

*"எல்லா விஷயமும் எனக்குத் தெரியும் தம்பி. நீங்க உத்தரவு குடுத்தீங்கன்னா நான் தூத்துக்குடி போய் நம்ம ஆட்களயெல்லாம் குடும்பத்தோட கொண்டாந்திடுவேன். அவுக வந்து கை வச்சாங்கன்னா ஒரு வாரம் பத்து நாளைல எல்லாத்தையும் ஒப்படி பண்ணி முடிச்சிடலாம்."*

**24 முதல் 25 வினாக்களுள் எவையேனும் ஒன்றனுக்கு அரைப்பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 4 வீதம் (1 × 4 மதிப்பெண்கள் = 4)**

24. ‘அறிவியல் தமிழ் வளர்ச்சி’ என்ற தலைப்பில் விளக்கக் குறிப்பு எழுதுங்கள்.

25. குறிஞ்சிக் கூத்தின் சிறப்புகளை எடுத்துக்கூறும் விதமாக பத்திரிகைச் செய்தி தயார் செய்யுங்கள்.

## பகுதி - IV

**26 முதல் 29 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 6 வீதம். (3 × 6 மதிப்பெண்கள் = 18)**

26. ‘வாய்மொழி இலக்கியங்களில் தமிழர் பண்பாடு’ என்ற தலைப்பில் சிறுகட்டுரை எழுதுங்கள்.

27. அறிவியல் தினத்தை முன்னிட்டு உங்கள் பள்ளிக்கு வருகை தரவிருக்கும் திரு க. முருகேசன் அவர்களிடம் நேர்முகம் காண்பதற்காக ஐந்து வினாக்கள் அடங்கிய வினாநிரல் தயார் செய்யுங்கள்.

28. திருவள்ளுவர் ‘ உழவு’ அதிகாரத்தில் கூறும் உழவுத் தொழில் குறித்த ஆறு கருத்துக்களை எழுதுங்கள்.

29. ‘செயற்கை உணவுகளால் ஏற்படும் பாதிப்புகள்’ என்ற தலைப்பில் பத்திரிக்கைத் தலையங்கம் தயார் செய்யுங்கள்.

**30 முதல் 32 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 6 வீதம். (2 × 6 மதிப்பெண்கள் = 12)**

30. பாரதிதாசனின் கவிதையில் பேசப்படும் சமூக ஏற்றத்தாழ்வுகள் குறித்த ஆறு கருத்துகளை வரிசைப்படுத்தி எழுதுங்கள்.

31. ‘வலைக்குள் வலை’ என்னும் சிறுகதையில் பேசப்படும் இணையதள வளர்ச்சியின் தீய விளைவுகள் குறித்து விமர்சனக் குறிப்பு எழுதுங்கள்.

32. நலிவுடைந்து வரும் கலைகளைப் பாதுகாத்து மீட்கும் பொருட்டு, கலைப்பண்பாட்டுத்துறை இயக்குநருக்கு விண்ணப்பக் கடிதம் தயார் செய்யுங்கள்.

## பகுதி - V

**33 முதல் 35 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு இரண்டு பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 8 வீதம்.**

**(2 × 8 மதிப்பெண்கள் = 16)**

33. உலக ஆரோக்கியத் தினத்தை முன்னிட்டு சுகாதாரத்துறை சார்பில் நடைபெறவிருக்கும் கருத்தரங்கில் வாசிப்பதற்காக, 'உணவே மருந்து' என்ற தலைப்பில் கருத்தரங்கக் கட்டுரை தயார் செய்யுங்கள்.

குறிப்புகள் :

- உணவின் இன்றியாமையாமை
- உண்ணும் முறை
- சமச்சீர் உணவு
- தவிர்க்க வேண்டியன.

34. பொங்கல் விழாவை முன்னிட்டு தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவிருக்கும் சிறப்புக் கருத்தரங்கில் பங்கேற்று உரையாற்றுவதற்காக, ' வேளாண்மையில் இயந்திரமயமாக்கம் நன்மைகளும் தீமைகளும்' என்ற தலைப்பில் கட்டுரை தயாரியுங்கள்.

குறிப்புகள் :

- இயந்திரமயமாக்கம்
- வேளாம்மைத்துறை மாற்றங்கள்
- விவசாயிகள் – வேலையின்மை பிரச்சினை
- ஆட்கள் பற்றாக்குறை

35. ‘குழந்தைகள் பாதுகாப்பு‘ குறித்த விழிப்புணர்வு முகாமில் பேசுவதற்காக, ‘திரு. கைலாஷ் சத்யாத்தியின் குழந்தைகள் நல்வாழ்வுப் பணிகள்’ என்ற தலைப்பில் சொற்பொழிவு உரை தயார் செய்யுங்கள்.

குறிப்புகள் :

- கொத்தடிமைகளைக் காப்பாற்றுதல்
- குழந்தைப் பாதுகாப்பு – போராட்டங்கள்
- குழந்தைகள் பாதுகாப்பு மையம்
- சீர்திருத்தப் பணிகள் – பொதுச்சேவை

___